இரண்டாவது பெருநகர் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எழும்பூர் சென்னை 8
பட்டியல் வழக்கு எண்-8566/2022

அரசு தரப்பு 2 வது சாட்சியின் சாட்சியம்

பெயர் : பாலு

த/பெ : தங்கசாமி

முகவரி : எண்- 170, வீ ஆர் பிள்ளை தெரு, திருவல்லிக்கேணி

தொழில் : ஓட்டல் வேலை

வயது : 35 / 2022

---

1873ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டம் 10 வது வகையங்கள் படி இன்று 2022 ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 22 ஆம் நாள் திருமதி.கிருஷ்ணவேணி, மொழிபெயர்ப்பாளர், என்பவரால் உறுதிமொழி கூறப்பட்டு சாட்சியம் அளிக்கப்படுகிறது.

---

<u>முதல் விசாரணை-</u>

நான் தற்சமயம் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது ஒட்டலில் வேலை செய்து வருகிறேன். கடந்த 06.08.2022 அன்று இரவு 11.30 மணியளவில் டி-6 அண்ணாசதுக்க காவல் நிலைய போலீசார் சுங்குவார்லேன் இடத்தில் ஒரு இருச்சக்கர வாகன திருட்டு வழக்கு சம்மந்தமாக பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். எ ன்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரிலுள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். என்னுடன் பஞ்சாட்சரம் என்பவரும் கையெழுத்து போட்டார். அந்த பார்வைமகஜர் அசா.ஆ. 2/ அசா.2 ஆகும். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை- இல்லை.</u>**

//இன்று 22.09.2022-ம் தேதி திறந்தவெளி நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, மற்றோரு குறுந்திரையின் மூலம் சாட்சிக்கு காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு இவ்வவை அறிய பகரப்பட்டது//